

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் வட்டார விசைத்தறி உரிமையாளர்கள் சங்கங்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே இந்த ஆண்டிற்கான தீபாவளி போனஸ் குறித்து கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்ற சுமூக பேச்சுவார்த்தைக்கு பின் உடன்பாடு ஏற்பட்டது. இதில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், வெள்ளக்கோவில் ஒன்றிய கழக செயலாளர் கே.சந்திரசேகரன், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம் உள்பட ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், விசைத்தறி உரிமையாளர்கள் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, அனைத்து மாணவர்கள் பயனடையும் வகையில் சந்தைப்பேட்டையில் புதிதாக கட்டப்பட்ட , அறிவு சார் மையத்தினை முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் சிவ.வீ. மெய்யநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி.கே.டி.தங்கமணி, குமார் (எ) துரைக்கண்ணு மற்ற பள்ளத்து விடுதி நாராயணன், ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம் கழகத்தின் மூத்த முன்னோடிகள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில்

உதகையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

உதகை, நவ.7-

தமிழ்நாட்டில் நடந்தேறும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, விலைவாசி உயர்வு, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட வையை கண்டுக்கொள்ளாத த.வெ.க அரசைக் கண்டித்து, தலைமைக் கழக அறிவிப்பின்படி, நீலகிரி மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் உதகை ஏ.டி.சி., ஜீப் நிறுத்தம் முன்பு மாபெரும் கண்டன ஆர்பாட்டம் மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம். ராஜு தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கோமதி வரவேற்றார், தலைமைக் கழக பிரதிநிதி கோவை வைஷ்ணவி அவர்கள் கலந்துகொண்டு கண்டன முழக்கமிட்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர் லட்சுமி, மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளங்கோவன், திராவிடமணி, தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில சிறுபான்மை நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, ரமேஷ், ஒன்றிய செயலாளர்கள் லாரன்ஸ், கண்ணன், தொரை, பீமன், ஜெகதீசன், உத்தமன், மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் ஜெயகுமாரி, வாணீஸ்வரி, பரிமளா, வெண்ணிலா, நாகமணி, மைமூனா, தமிழ்வாணி, பிரபாவதி, கௌரி, வள்ளி, சிவகாமி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் சித்ராதேவி, கீதா, சுசிலா, விசாலாட்சி, யசோதா, தனபாக்கியம், கிர்த்தனா, ஜாஸ்மின் உட்பட மகளிர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ஜெயந்தி நன்றி கூறினார்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாபட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் 1000 கழக நிர்வாகிகளுக்கு பண்டிகையை முன்னிட்டு முன்னாள் ஒன்றிய குழு தலைவரும், ஒன்றிய செயலாளருமான ஏ. விஜயகுமார் ஏற்பாட்டில் புத்தாடைகள் மற்றும் இனிப்புகளை மாவட்ட கழக செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம். பி, வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஹரி அய்யாதுரை, காந்திமதி சின்னச்சாமி, மாவட்ட பிரதிநிதிகள் அகரம் ராஜேந்திரன், பொன்னுமலை, இன்பராசு, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளரும் முன்னாள் பேரூராட்சி செயலாளரும் கவுன்சிலருமான சரவணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளரும், கவுன்சிலருமான தேவன், மாவட்ட பிரதிநிதி தீனதயாளன், பேரூராட்சி துணைச் செயலாளர் நரசிம்மன், பேரூராட்சி கவுன்சிலர்கள் புவனேஸ்வரி பிரபாகரன், பிரேமா தனசேகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் நடராஜ், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் மகேஸ்வரன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஏ.விஜயகுமார் ஏற்பாட்டில்

அயோத்தியா பட்டணத்தில் 1000 கழக நிர்வாகிகளுக்கு புத்தாடை - இனிப்பு!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. வழங்கினார்!

சேலம், நவ. 7-

சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாபட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் 1000 கழக நிர்வாகிகளுக்கு பண்டிகையை முன்னிட்டு முன்னாள் ஒன்றிய குழு தலைவரும், ஒன்றிய செயலாளருமான ஏ. விஜயகுமார் ஏற்பாட்டில் புத்தாடைகள் மற்றும் இனிப்புகளை மாவட்ட கழக செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி. வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஹரி அய்யாதுரை, காந்திமதி சின்னச்சாமி, மாவட்ட பிரதிநிதிகள் அகரம் ராஜேந்திரன், பொன்னுமலை, இன்பராசு, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளரும் முன்னாள் ஒன்றிய துணைத் தலைவர் ஏ. செந்தில்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், முன்னாள் பேரூராட்சி செயலாளரும் கவுன்சிலருமான சரவணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளரும், கவுன்சிலருமான தேவன், மாவட்ட பிரதிநிதி தீனதயாளன், பேரூராட்சி துணைச் செயலாளர் நரசிம்மன், பேரூராட்சி கவுன்சிலர்கள் புவனேஸ்வரி பிரபாகரன், பிரேமா தனசேகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் நடராஜ், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் மகேஸ்வரன், மோகன், ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் ராகுல், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் மோகன்ராஜ், ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் வெண்ணிலா வெங்கடாஜலம், துணை அமைப்பாளர் அன்னக்கொடி, மாலதி, ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் ராஜ்குமார், ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர்கள் காங்கிரத்தினம், அண்ணாமலை, ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் சதீஷ்குமார், ஒன்றிய வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராஜீவ் காந்தி, சதீஷ்குமார், பிரபு, செந்தில், வீரன், ராஜா, ஜெயவேல், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் முத்துக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மீனவர்களின் உயிர்களைக் காவு வாங்கியது:

காசிமேடு மீனவச் சொந்தங்களின் இந்தக் கண்ணீர்க் குரல் த.வெ.க. அரசின் கையாலாகாத்தனத்திற்கு சாட்சியாக நிற்கிறது!

தி.மு.க. ஐ.டி.விங் சமூக வலைதளப் பதிவு!

சென்னை,நவ.7-

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகத் திட்டத்திற்காக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கத் துணிவது முதல். கடலில் உயிருக்குப் போராடும் மீனவர்களைக் காப்பாற்ற வக்கில்லாமல் விட்டது வரை. மீனவச் சமுதாயத்தைத் த.வெ.க. அரசு வெறும் ஏமாளிகளாகவும். அலட்சியப்படுத்தப்பட வேண்டியவர்களாகவும்தான் பார்ப்பதன் காரணம் என்ன?

காசிமேடு மீனவச் சொந்தங்களின் இந்தக் கண்ணீர்க் குரல்



த.வெ.க. அரசின் கையாலாகாத்தனத்திற்கு சாட்சியாக நிற்கிறது!

கடலில் சிக்கிய மீனவர்கள் GPS Live Location-னுடன் "படகு மூழ்கப் போகுது" என்று SOS செய்தி அனுப்பி மீனவர்கள் கதறியும். "இரவு 6 மணி ஆகிவிட்டது. நாளைக்குத் தேடுவோம்" என்று ஆபீஸ் நேரக் கணக்கு பார்த்து மீனவர்களின் உயிர்களைக் காவு வாங்கியது த.வெ.க. அரசு!

உயிர்கள் கடலில் பலியான பிறகு, கேமராக்களுடன் காசிமேட்டிற்கு வந்த அமைச்சரைப் பார்த்து "உயிர் போன பிறகுதான் வருவீங்களா?" என்று மீனவப் பெண்கள் காறி உமிழ்ந்ததில் எந்தத் தவறும் இல்லை!

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி எழுப்பியுள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வரத. கோபாலகிருஷ்ணன்
நவம்பர் 7 (2001)



திருவாரூர் மாவட்டக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியப் பெருந்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

நன்னிலம் பகுதியில் கழகம் வளர்க்க பாடுபட்டவர். வாழ்நாள் முழுவதும் இயக்கப் பணிகளுக்காக தன்னையே அர்ப்பணித்தவர்.

நெருக்கடி நிலையின்போது ஓராண்டு சிறைவாசம். மேலும், கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம்

மீனவர்கள் கடும் எதிர்ப்பு!

2-வது முறையாக கூட்டம் ஒத்தி வைப்பு!

சென்னை, நவ.7-

பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தொடர்பான கருத்துக்கேட்பு கூட்டம் என்பது வெறும் கண்துடைப்பு என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டி வரும் நிலையில், 2வது முறையாக கூட்டம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

கடும் எதிர்ப்பையும் மீறி, சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட த.வெ.க. அரசு தன்னிச்சையாக முடிவு செய்துள்ளது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட இடத்தில் உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளை இடிக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தங்கள் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்கில் பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட முற்பட்டால் மிகப்பெரிய போராட்டம் வெடிக்கும் என அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புதிய தலைமைச் செயலகம் கட்டுவது தொடர்பான கருத்துக்கேட்பு கூட்டம் என்பது வெறும் கண்துடைப்பு என்று குற்றஞ்சாட்டி மீனவர் சங்கங்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், புதிய தலைமைச்செயலகம் கட்டுவதற்கான கருத்துக்கேட்பு கூட்டம் 2வது முறையாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த செவ்வாய்க்கிழமை கருத்துக்கேட்பு கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு, மீனவர்களின் எதிர்ப்பால் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மீண்டும் தள்ளிவைக்கப் பட்டுள்ளது. பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் வராது என செய்தியை பரப்பிவிட்டு தலைமைச் செயலகம் கட்ட அரசு தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் பேச்சுகள் முன்னுக்குப்பின் முரணாக உள்ளதாகவும் மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

க. வேல்சாமி
நவம்பர் 7 (2007)



இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் பகுதியில் முதன்முதலாக பல்வேறு கிளைக் கழகங்களை அமைத்தவர்.

மோகனூர் கிளைக் கழகம் அமைத்து, அதன் செயலாளர் பின்னர் மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1996ல் நாமக்கல் தொகுதியில் கழக சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.